# ஒளிமயமான
# ஒரு இலங்கை நாட்டிற்கான முன்னோக்கு

## "மஹிந்த சிந்தனை முன்னோக்கை" உணர்வதற்கான வழிப்பாதை

## அறிமுகம்

2010ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரதான மையப்பார்வை மஹிந்த சிந்தனை: வருங்காலத்திற்கான முன்னோக்கு - இலங்கையில் நடுத்தரத் தவணை பொருளாதார சுபீட்சத்தை எய்துவதாகும். ஆயுதத் தாங்கிய போரின் முடிவு இப்பொழுது திறந்த பொருளாதாரத்தின் பொருளாதார நலன்களை உருவாக்குவதற்கான வாய்ப்பைத் முழுமையாகத் திறந்துவிட்டுள்ளது. இந்த உள்துறைக் காரணிகள் சமகால உலகளாவிய பொருளாதார மறுமலர்ச்சியோடு சேர்ந்து நீண்டகாலமாக எதிர்பார்ப்பாகிய அதன் பொருளாதார செழுமையை துரித வேகத்தில் எய்துவதற்கு இலங்கைக்கு அறியதோர் வாய்ப்பை அளித்துள்ளன. அரசாங்கத்தினால் தெரிவுசெய்யப்பட்டுள்ள கொள்கை மறுசீரமைப்பு நடைமுறையொன்றே இந்த வளர்ச்சியை "துரிதமாகவோ" "மெதுவாகவோ" "நிலைபேறானகதாகவோ "குறுகிய காலம் நிலைக்கக்கூடியதாகவோ" தூண்டிவிடக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளது.

விஞ்ஞாபனத்தில் விவரிக்கப்பட்ட கொள்கை விளக்கத்தின் முக்கியமான அம்சங்களைப்பற்றிய கணிப்பீடொன்றுடான இந்தக் கொள்கை சார்ந்த பொழிப்பு பொருளாதார செழுமையை எய்துவதில் கொள்கைகளை வகுப்பதற்கும் மறுசீரமைப்புகளுக்கு ஒரு வழிகாட்டு நெறியைக் காண்பிக்கின்றது. "சிறந்த பொருளாதாரம்" குறுகிய காலத்தில் அல்ல, நீண்ட காலத்திலேயே "சிறந்த அரசியலுக்கு" இட்டுச்செல்கிறது. அரசியல் ரீதியில் மக்களிடையே அபிமானம் உச்சக் சட்டதில் இருக்கும் நேரத்தில் அரசியல் ரீதியில் தேவைப்படுத்தப்பட்ட மறுசீரமைப்பு நடைமுறை நாளடையில் முனைப்பு மழுங்கிவிடுகின்றது.

2015ஆம் ஆண்டளவில் 4000 அமெரிக்க டொலரையும் விஞ்சி நாட்டின் தலை வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கு விஞ்ஞாபனம் இலக்கு வைத்திருக்கின்றது. இதற்கு உள்ளவாறான மொத்த உள்ளூர் உற்பத்தி வளர்ச்சியை ஆண்டொன்றுக்கு 8-10 சதவீத்திற்கு நிலைபெறச்செய்யப்படும் அதே வேளையில் நாட்டின் முதலீட்டு விகிதாசாரம் நடப்பிலுள்ள 25 சதவீத மட்டத்திலிருந்து மொத்த உள்ளூர் உற்பத்தி (மொ.உ.உ) அண்ணளவாக 40 சதவீதமாக உயரவேண்டும்.

தலை வருமானத்தில் உண்மையான அதிகரிப்பு மக்களின் சராசரி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றது. அதே வேளை நாட்டின் பொருளாதார வலிமையும் ஏனைய உயர் செயற்பாட்டு பொருளாதாரங்களும் நலைநிறுத்தப்படுதல் வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட ஆசிய நாடுகளில்
தலை வருமானம் (யூ.எஸ். டொலர்)

| | 1960 | 1980 | 2005 |
|---|---|---|---|
| இந்தியா | 68 | 207 | 720 |
| பாகிஸ்தான் | 76 | 259 | 690 |
| தாய்லாந்து | 95 | 716 | 2750 |
| இலங்கை | 152 | 255 | 1160 |
| தென் கொரியா | 152 | 1528 | 15830 |
| மலேசியா | 280 | 1715 | 4960 |
| சிங்கப்பூர் | 428 | 4592 | 27490 |

மூலம்: உலக வங்கி, உலக அபிவிருத்தி அறிக்கைகள்

இலங்கை தொடர்ந்து வாய்ப்புகளை நழுவவிடுகின்றது

இலங்கை அபிவிருத்தியின் வரலாறு வாய்ப்புகளை நழுவவிடும் கதையாகவே உள்ளது. 1960இல் அதன் தலை வருமானம் தென் கொரியாவைப் போன்று அதே அளவிலேயே இருந்தது. முதல் 20 ஆண்டுக் காலப்பகுதியின்போது (1960-1980) இலங்கையின் தலை வருமானம் இரட்டிப்பாகக்கூட இல்லை. ஆனால் தென் கொரியாவின் தலை வருமானம் 10 மடங்குகளுக்குமேல் அதிகரித்துள்ளது. அடுத்த 25 ஆண்டுகளில் இலங்கையின் தலை வருமானம் ஏறக்குறை 4 மடங்கு மட்டுமே அதிரித்தது. கடந்த சில தசாப்தங்களாக பல ஆசிய நாடுகள் இலங்கையை முந்திக்கொண்டு வளர்ச்சி கண்டுள்ளன. தெற்காசியாவில் இலங்கைக்குப் பின்னால் வெகு தூரத்திலிருந்த பல அயல் நாடுகளும் அருகில் வந்துள்ளன.

## செழுமையின் இரு தூண்கள்

விஞ்ஞாபனத்தில் எடுத்துரைக்கப்பட்டவாறு இலங்கையின் நடுத்தர தவணைப் பொருளாதார செழுமை இரு தூண்களின் அடிப்படையிலேலே எய்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முதலாவது இலங்கையை "வலுவான உலக கேந்திர நிலையமாக" மாற்றியமைத்தல். இரண்டாவது உலகை ஆளக்கூடிய "உள்ளூர் தொழில்முயற்சியை உருவாக்குதல். இந்த இரு விடயங்களிலும் பொருளாதார சுபீட்சத்தை எய்துவதற்கு இலங்கை உலக பொருளாதாரத்திற்கு அதன் திறந்த நிலையை வலுப்படுத்தவேண்டும் என்பதனை விஞ்ஞாபனம் வெளிப்படையாகவே ஏற்றுக்கொள்கின்றது. உலக பொருளாதாரத்துடன் இணைக்கப்படாமல் உலக கேந்திர நிலையமொன்று இருக்க முடியாது. அத்துடன் உலக சந்தைக்குப் பொருள் விநியோகம் செய்யாமல் தொழில் முயற்சியில் அபிவிருத்தியடைய முடியாது.

## வலுவான உலக கேந்திர நிலையமாக இலங்கை

கடல், வான். வர்த்தகம் மின்வலு மற்றும் அறிவுத்துறை ஆகியவற்றின் ரீதியில் "வலுவான உலக கேந்திர நிலையமாக" மாற்றுவதன்மூலம் "உத்வேகமான பாய்ச்சல்" ஒன்றை இலங்கை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஒரு செயற்திட்டமாக இன்னமும் மாற்றப்படவேண்டி முக்கியமான ஒரு எண்ணக்கருத்தாகும். உலக கேந்திர நிலையத்தின் அந்தஸ்தை எய்துவதற்கான திறவுகோல் இந்த அனைத்துத் துறைகளிலும் கூடுதலான இணைப்பும் ஆதாரமளிக்கும் பொருளாதார துறைகள் அனைத்திலும் உலக போட்டி நிலைமையும் ஆகும். இணைப்பும் போட்டி நிலைமையும் பாரிய பொருளாதர அடிப்படைகள்,

பகிரங்கத் துறை, ஒழுங்குபடுத்தும் செயல்முறை அமைப்புகள், சட்டம், ஒழுங்கு போன்ற சந்தையை அடிப்படையாகக் கொண்ட கொள்கை மறுசீரமைப்புகளின் ஊடாக கூடுதலான "பொருளாதார திறந்த நிலையைத்" தேவைப்படுத்துகின்றன.


## வலுவான உலக கேந்திர நிலையமாக இலங்கை

கடல், வான். வர்த்தகம் மின்வலு மற்றும் அறிவுத்துறை ஆகியவற்றின் ரீதியில் "வலுவான உலக கேந்திர நிலையமாக" மாற்றுவதன்மூலம் "உத்வேகமான பாய்ச்சல்" ஒன்றை இலங்கை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஒரு செயற்திட்டமாக இன்னமும் மாற்றப்படவேண்டி முக்கியமான ஒரு எண்ணக்கருத்தாகும். உலக கேந்திர நிலையத்தின் அந்தஸ்தை எய்துவதற்கான திறவுகோல் இந்த அனைத்துத் துறைகளிலும் கூடுதலான இணைப்பும் ஆதாரமளிக்கும் பொருளாதார துறைகள் அனைத்திலும் உலக போட்டி நிலைமையும் ஆகும். இணைப்பும் போட்டி நிலைமையும் பாரிய பொருளாதர அடிப்படைகள், பகிரங்கத் துறை, ஒழுங்குபடுத்தும் செயல்முறை அமைப்புகள், சட்டம், ஒழுங்கு போன்ற சந்தையை அடிப்படையாகக் கொண்ட கொள்கை மறுசீரமைப்புகளின் ஊடாக கூடுதலான "பொருளாதார திறந்த நிலையைத்" தேவைப்படுத்துகின்றன.

## உலகை ஆளும் தொழில்முயற்சியாளர்கள்

சர்வதேசச் சந்தைக்குப் பொருள் விநியோகம் செய்வதன்மூலம் உள்ளூர் பொருளாதாரத்தை விசாலிக்கும் வகையில் உள்ளூர் தொழில்முயற்சியாளர்கள் உலகளாவிய போட்டி நிலைமைக்கு உயர்வர். ஆயினும், உள்ளூர் தொழில்முயற்சியாளர்கள் "கொள்கைச் சூழலிலிருந்தல்லாமல்" "அரசாங்க உதவியலிருந்தே" உதயமாவர் எனத் தவறான ஊகம் காணப்படுகின்றது. மேலும் உள்ளூர் தொழில்முயற்சி ஒரு "நீண்ட தவணை" நடைமுறையாகும். இதில் "நடுத்தரத் தவணையால்" பொருளாதார சுபீட்சத்தை அடையமுடியாது. உள்ளூர் தொழில்முயற்சியாளர் வர்க்கம் எதிர்பார்க்கப்பட்ட பாரிய முதலீட்டு உந்துதலுக்கு முக்கியமான பங்களிப்பைச் செய்யமுடியாது. அபிவிருத்தி செயல்நுட்பம் வெளிநாட்டு முதலீட்டிற்கெதிராக உள்ளூர் முதலீட்டிற்கே ஆதரவளிப்பதாகத் தென்பட்டபோதிலும் அகன்ற சேமிப்பு விரிசல்களை அடைப்பதற்கு பொருளாதாரம் பிரமாண்டமாக முன்னோக்கி உந்திச் செல்லவேண்டுமாயின் வெளிநாட்டு முதலீடு தேவைப்படுகின்றது.

தலைவரு மானத்திலான மாற்றம் 1991 - 2009



## பணவீக்கம் தலைவருமானத்தையும் வீக்கமுறச் செய்யலாம்

யூஎஸ் டொலரின் ரீதியில் மொ.உ.உ. குறைந்த வகுக்கும் எண் ஒன்றினால் செலாவணி வீதம் (இ.ரூ./யூ எஸ் டொலர்) வீக்கமுறச் செய்யப்படலாம். 2000-2003ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பணவீக்கத்தின் சராசரி வீதம் 9 சதவீதமாக இருந்ததுடன் செலாவணி வீதம் 8 சதவீதத்திற்குமேல் வீழ்ச்சியுற்றது. பணவீக்கத்தின் சராசரி வீதம் 15 சதவீதத்தை எட்டிய காலப்பகுதியாகிய 2004-2008ஆம் ஆண்டுகளில் செலாவணி வீதம் 2.4 சதவீதத்தால் மட்டும் கீழிறங்கியது. ஆதலால் தலை மொ.உ.உ. யில் இலக்கத்தின் அடிப்படையிலான அதிகரிப்பு மக்களின் சராசரி கொள்வனவுப் பலத்தைப் பிரதிபலிக்க மாட்டாது.

## அரசாங்கத்தின் பணி: வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுத்தல்

விஞ்ஞாபனத்தில் விவரிக்கப்படும் அபிவிருத்திச் செயல்நுணுக்கத்தின் வடிவம் உள்ளூர் தொழில்முயற்சி அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட "ஏற்றுமதி ஊக்கவிப்பிற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட தலையீடுகளுள்" ஒன்றாகும். "சந்தை அடிப்படைகளை சீராக்கிக்கொள்வதற்கு மாறாக "அரசாங்கத்தின் தலையீட்டை சீராக்கிக்கொள்ளம் ஓர் அணுமுறை (அ) நாட்டின் முனைப்பாக ஒப்புநோக்கல் அனுகூலத்தை உதாசீனம் செய்யவும் (ஆ) சொற்ப தேசிய ஆதாயத்திற்காக சுமையை வரியிறுப்பாளர்கள்மீது ஏற்றவும் (இ) அரசாங்கத்திற்கும் கைத்தொழிலுக்கும் இடையில் களங்கமுற்ற உறவுகளான வாய்ப்பை உருவாக்கவும் விழையும். இதன் விளைவாக வளங்களின் தவறான ஒதுக்கீடுகள் தெரிவுசெய்யப்பட்ட வெற்றியாளர்களை விசாலிப்பதற்கு வழிவகுக்கும். இதனால் கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் விடயத்திலும் போன்று தொடர்சியாக அரசாங்கத்தின் ஆதரவின்றி நிலைத்திருக்க மாட்டா.

வெளிநாட்டு நேரடி முதலீடு: உள்ளீடுகளும் கையிருப்புகளும் 2008

| | உள்ளீடு (யூஎஸ்$) பில்லியன் | கையிருப்பு (யூஎஸ்$) பில்லியன் |
|---|---|---|
| கிழக்கு ஆசியா | 187.0 | 1363.1 |
| சீனா | 108.3 | 378.1 |
| ஹொங்கொங் | 63.0 | 835.8 |
| தென் கிழக்கு ஆசியா | 60.0 | 663.0 |
| மலேசியா | 8.0 | 73.3 |
| சிங்கப்பூர் | 22.7 | 326.1 |
| வியட்நாம் | 8.1 | 48.3 |
| தெற்காசியா | 50.7 | 186.1 |
| இந்தியா | 41.6 | 123.3 |
| பாகிஸ்தான் | 5.4 | 31.1 |
| இலங்கை | 0.8 | 4.3 |

மூலம்: UNCTAD(2009): உலக முதலீட்டு அறிக்கைள் (2009)

## இலங்கை கவர்ச்சிகரமான ஒரு முதலீட்டு நடுநிலையம் அல்ல

இலங்கை இதுவரை வெளிநாட்டவர்களுக்கு கவர்ச்சிகரமான முதலீட்டு நடுநிலையமாக அமையவில்லை. கடந்த 30 ஆண்டுகளாக திரண்ட மூலதனப் மொத்த வெளிநாட்டுப் பங்குத்தொகுதி யூஎஸ்.டொலர் 4.3 பில்லியன் மட்டுமே. இலங்கையைவிட வெகு நாட்களுக்குப்பின்னரே சந்தையை அடிப்படையாகக்கொண்ட கொள்கை மறுசீரமைப்புகளை ஆரம்பித்த வியாட்நாம் போன்ற ஒரு நாடுகூட ஓராண்டில் யூஎஸ் டொலர் 8 பில்லியனுக்குமேல் பெறுகின்றது.

## மஹிந்த சிந்தனய பொருளாதார முன்னோக்கை எய்துவதற்கான வழிப்பாதை

விஞ்ஞாபனத்தில் விவரிக்கப்பட்டவாறு நடுத்தரத் தவணைப் பொருளாதார சுவீட்சத்தை எய்துவதற்கு, கூடுதலான திறந்த நிலை, எளிமையானவையும் தெளிவானவையுமான நடைமுறைகள், உறுதியான பெரும்பொரளாதார அடிப்படைகள் என்பவற்றுடன் வலிமையூட்டப்பட்ட உலகளாவிய இணைப்பும் போட்டி நிலைமைகளும் தேவைப்படுகின்றன. மேலும் மறுசீரமைப்புகள் முன்னோக்கி அடியெடுத்து வைக்கப்படும் ஒரு துணிச்சலுடன் ஆரம்பிக்கப்படுதல்வேண்டும்.

## அபிவிருத்திச் செயல்நுட்பம்

தொழில்முயற்சி அபிவிருத்தியானது பிரதானமாக முதலீட்டையும் தொழில்முயற்சியையும் அரசாங்கத்திடமிருந்து அல்லாமல் கொள்கைச் சூழலிலிருந்து தோன்றச் செய்வதற்கு அவசியமான விதத்தில் சரியான ஊக்குவிப்புகளுடன் கொள்கைத் திட்டத்திலேயே அடங்கியுள்ள ஒரு இயற்கை நடைமுறையாகும்.

i. கொள்கைச் சூழல் உற்பத்தித் துறைகளிடையே பாரசட்சம் காட்டுவதாக அமையக்கூடாது. ஏனெனில் வாய்ப்புகள் விரிவாக்கல் துறைகளையும் வாய்ப்புள்ள முதலீடுகளையும் வாய்ப்புள்ள தொழில்முயற்சி அபிவிருத்தியையும் ஊக்கமிழக்கச்செய்கின்றது. இது விசேட ஊக்குவிப்புகளைவிடச் சிறந்த பொருளாதார அடிப்படைகளையும் ஒழுங்குபடுத்தும் செயல்முறை அமைப்புகளையும் நாடும் வெளிநாட்டு முதலீடுகளுக்கும் ஏற்புடையதாகும்.

ii போட்டிநிலையிலான இறக்கமதிகளால் சளைக்காதிருப்பதற்கும் இத்துறையில் அதிகரிக்கும் வருமானத்தை உறுதிசெய்வதற்கும் சர்வதேசச் சந்தைகளுக்கு பொருட்களை விநியோகம்செய்வதற்கும் கமத்தொழிற்துறை போட்டி நிலையில் இருத்தல்வேண்டும். இத்துறையிலுள்ள பற்றுநில முறை, காணிப் பயன்பாட்டுப்போக்கு, ஆதன உரிமைகளின் வழங்கீடு போன்ற அமைப்புமுறைசார்ந்த பலவீனங்கள் படிப்படியாகவாயினும் தீர்க்கப்படவேண்டும்.

iii பொருளாதாரத்தை வெகுதூரம் கொண்டு செய்வதற்கு உள்ளூர்ச் சந்தை மிகவம் சிறியது ஆதலால் அபிவிருத்திச் செயல்நுட்பத்தையும் பொதுவில் சர்வதேசச் சந்தையையும் குறிப்பாக ஏற்றுமதி ஊக்குவிப்வையும் நோக்கி அபிவிருத்திச் செயல்நுணுக்கத்தின் பிரதான கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இது இலங்கையில் உலகளாவிய கேந்திர நிலையம் ஒன்றை உருவாக்குவதற்கான செயற்திட்டத்துடன் ஒத்திருத்தல் வேண்டும்.

iv. பொருளாதாரத்தில் உற்பத்திச் செலவைக் குறைப்பதிலும் போட்டியையும் போட்டி நிலைமைகளையும் குறைப்பதிலும் அரசாங்கத்தின் பிரதான கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். அரசாங்கத்தின் தலையீடு, ஒழுங்குபடுத்தும் செயல்முறை அமைப்பு, உற்பத்தி வளர்ச்சியை தடைசெய்யும் உட்கட்டமைப்புகள், சந்தையின் வளைந்து கொடுக்காத தன்மை மற்றும் மனித வளங்கள் இல்லாமை என்பவற்றிலிருந்தே இத்துறையில் வழமையாக பிரச்சினைகள் எழுகின்றன.

v. பெருந்தெருக்கள், புகையிரத வசதிகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், மின்சார உற்பத்தி மற்றும் ஏனைய துறைகளிலான பகிரங்க முதலீட்டுத் திட்டத்தில் பகிரங்க, தனியார் கூட்டு முயற்சிகளுக்கான வாய்ப்புகளையும் அரசாங்கத்தினால் விசாலிக்க முடியும்.

## ஒழுங்குபடுத்தும் கட்டுக்கோப்பு

வியாபாரச் செலவு, முதலீட்டு ஊக்குவிப்பு, தொழில்முயற்சி அபிவிருத்தி என்பன நாட்டின் ஒழுங்குபடுத்தும் கட்டுக்கோப்பினாலும் அதிகார வர்க்கத்தின் ஆட்சி முறை யினாலுமே பிரதானமாகத் தீர்மானிக்கப்படுகின்றன. பொருளாதாரத்தின் துரித வளர்ச்சி எளிமையானவையும் தெளிவானவையுமான ஒழுங்குவிதிகளுக்கும் வினைத்திறன்மிக்க பகிரங்க சேவைக்குமான தேவைப்பாட்டையும் அதிகரிக்கின்றது என்பது வெளிப்படை.

i. வியாபாரம் செய்யும் வாய்ப்புகள் சார்ந்த செலவுகளையும் கொடுக்கல் வாங்கல் செலவுகளையும் குறைப்பதற்கு ஒழுங்குபடுத்தும் செயல்முறை அமைப்புகளும் அதிகார ஆட்சி சார்ந்த நடவடிக்கைமுறைகளும் இலகுவானவையாகவும் யதார்த்தப்பூர்வமானவையாகவும் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். இத்துறைகளிலான மறுசீரமைப்புகள் கடற்துறை, வான்துறை, வர்த்தகத்துறை, மின்வலு, அறிவுத்துறை போன்றவற்றில் உலகளாவிய கேந்திர நிலையம் என்ற எண்ணக்கருவை உணர்வதற்கு வழிகோலும் இலங்கைப் பொருளாதாரத்தின் சர்வதே ரீதியிலான போட்டியை மேம்படுத்தும்.

ii பொருளாதார மற்றும் முகாமைத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் தொழிற்படுவதற்கு பகிரங்கத் தொழில்முயற்சிகளுக்கு கூடுதலான தன்னாதிக்கம் அவசியமாகின்றது ஏனெனில் இதிலுள்ள பிரச்சினையானது சொத்துவம் அல்ல, ஆனால் முகாமைத்துவமே. பகிரங்க நிர்வாகத்தைக் கையாளும் அரசாங்க நிறுவனங்கள் தேவையால் உந்தப்படும் அடிப்படையில் தொழிற்படுவதற்குக் கூடுதலான தன்னாதிக்கத்தையும் ஊக்குவிப்பு அமைப்புமுறையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

iii சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தை முகாமைசெய்வதற்கான திறவுகோல் சட்ட ஆட்சியாகும். ஏனெனில் இதனை வலுவுக்கிடுவதனால் ஒருவரின் செயற்பாடு மற்றொருவரினதும் முழுச் சமுதாயத்தினதும் பொருளாதாரச் சுதந்திரத்தின் பாதிப்பு தடைசெய்யப்படுகின்றது. சட்டவாட்சியை வலுவுக்கிடுவதிலான பலவீனம் இதுவரை ஆழமாக வேரூன்றியுள்ள பொருளாதாரச் சீர்கேடுகளுக்கும் ஊழல்கள் தோன்றுவதற்கும் வழிவகுத்துள்ளன. இவற்றைத் திருத்துவது மேலும் மேலும் கடினமாகியுள்ளன.

## பெரும்பொருளாதார ஒழுங்குமுறை

வியாராரப் பண்டங்களின் விலைகள், வட்டி வீதங்கள், செலாவணி வீதங்கள் என்பன நிலையானவையாகவும் நெகிழும் தன்மையுடையனவாகவுமிருத்தல் வேண்டும். அந்தந்தச் சந்தைகளில் அரசாங்கமோ மத்திய வங்கியோ தலையிடுமானால் நிலையான தன்மையும் நெகிழும் தன்மையும் ஒன்றுக்கொன்று முரண்பாடான அம்சங்களாகும். பெரும்பொருளாதார ஒழுங்குமுறையும் அதன் நீண்டகால் நிலைபெறு தன்மையையும் எதிர்வுகூறும் தன்மையையும் கொண்டிருத்தல்வேண்டும். இது முதலீட்டாளரின் நம்பிக்கையை அதிகரிக்கின்றது.

i. வரவுசெலவுத் திட்ட நிலைமையானது சமாளிக்கக்கூடிய வரவுசெலவு பற்றாக்குறையை குறிக்கோளாகக் கொண்டு வருமானம், செலவினம் ஆகிய இரு பக்கங்களிலும் மேம்படுத்தப்படுதல் வேண்டும். வருமானத்தின் பக்கத்தில் பல்வேறு வரிகளின் சிக்கலான நடைமுறைகளைத் தவிர்ப்பதற்கு வரி முறை எளிமையாக்கப்படுதல் வேண்டும். வரித்தளம் அனைத்து வருமானம் ஈட்டுபவர்களையும் சொத்துக்களின் உரிமையாளர்களையும் உட்புகுத்துவதன்மூலம் விரிவாக்கப்படவேண்டும்.

ii செலவினத்தின் பக்கத்தில் செலவுச் சிக்கனத்தையும் ஒளிவுமறைவு அற்றத் தன்மையையும் அரசாங்கத்தின் செலவினத்திற்கு கணக்குக்காட்டும் பொறுப்பையும் மேம்படுத்துவதற்கு வீண்விரயமான, ஆக்கத் திறனில்லாத செலவினப் பாங்குகள் மீளாய்வுசெய்யப்படுதல்வேண்டும். கூடுதலான முகாமைத்துவத் தன்னாதிக்கததுடனா பகிரங்கத் தொழில்முயற்சிகளையும் ஏனைய பகிரங்க நிறுவனங்களையம் புனரமைப்புச் செய்வதன்மூலம் அரசாங்கத்தின் நிதி நிலைமையும் மேம்படுத்தப்படும்.

iii அரசாங்கத்தின் நிதிசார்ந்த ஒழுக்கநெறி பணம் சார்ந்த ஒழுக்கநெறியைப் பேணுவதற்குப் நிதியைக் கையாளும் அதிகாரிகளுக்குத் துணைபுரியும். அத்துடன் சராசரி வட்டிவீதங்கள் குறைவாகவும் நிலையானவையாகவுமிருத்தல் வேண்டும். மேலும் தலையீட்டு வழிமுறைகளுக்கு அல்லாமல் சந்தையின் உத்வேகத்திற்கு எதிர்வினை காட்டுதல் வேண்டும்.

iv. செலாவணி வீதமும் நிலையாக் ஆனால் நெகிழும் தன்மையுள்ளதாக இருத்தல் வேண்டும். ஏனெனில் அநாவசியமான கையாடல்களுக்கு அல்லாமல் சந்தையின் உந்துசக்திக்கு எதிர்வினை காட்டப்படுதல்வேண்டும். இதற்கு தனியார் பண அனுப்புதல்களின் மீதல்லாமல் (நடைமுறைக் கணக்கு) அதிகரித்த வெளிநாட்டுச்

செலாவணி உள்ளீடுகளும் வெளிநாட்டுக் கடனெடுத்தல்களைவிட (நிதிசார்ந்த கணக்கு) வெளிநாட்டு முதலீடுகளும் அவசியப்படுகின்றன.

வழமையாக என்ன செய்வதென்பதனைப் புரிந்து கொள்வது கடினம். இதற்கு இலகுவான ஒரு வழி தொழில்செய்யும் அறிக்கை (Doing Business Report), உலகளாவிய போட்டிநிலை பற்றிய அறிக்கை (Global Competitiveness Report), பொருளாதாரச் சுதந்திர அறிக்கை (Economic Freedom Report), உலக முதலீட்டு அறிக்கை (World Investment Report) ஊழலைக் கண்டுணர்தல் அறிக்கை (Corruption Report) போன்ற சர்வதேசப் புள்ளிவிவர அறிக்கைகளைப் பயன்படுத்துவதாகும். இந்த அறிக்கைகள் இயைபான துறையில் நாடொன்றின் நிலைமையை உலகின் ஏனைய நாடுகளுக்கு வெளிப்படுத்துகின்றன. இந்த அனைத்து அறிக்கைகளிலும் இலங்கை "கீழ் வரிசைப்படுத்தப்பட்ட நாடாவே" காணப்படுகின்றது. இதனால் கொள்கைத் தயாரிப்பாளர்கள் உயரத்தில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள நாடுகளின் மட்டத்தை அடைவதற்கான படிகளைப் பின்பற்றலாம்.

வியாபாரம் செய்யும் இலகு வழி: வரிசைப்படுத்தும் சுட்டி

| | இலங்கையின் வரிசைத் தரம் | சிங்கப்பூரின் வரிசைத்தரம் |
|---|---|---|
| வியாபாரத்தை ஆரம்பித்தல் | 29 | 10 |
| அனுமதிப்பத்திரங்களைக் கையாளுதல் | 161 | 2 |
| வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்துதல் | 110 | 1 |
| ஆதனத்தைப் பதிவுசெய்தல் | 141 | 16 |
| கடன் பெறுதல் | 68 | 5 |
| முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல் | 70 | 2 |
| வரி செலுத்துதல் | 164 | 5 |
| எல்லைக்கப்பால் வியாபாரம் செய்தல் | 66 | 1 |
| ஒப்பந்தங்களை வலுவுக்கிடுதல் | 135 | 14 |
| தொழிலை மூடிவிடுதல் | 43 | 2 |
| பொது வரிசைத் தரம் | 102 | 1 |

மூலம்: உலக வங்கி, வியாபாரம் செய்தல் அறிக்கை 2009

## இலங்கையில் வியாபாரம் செய்வது எவ்வளவு சுலபமானது?

உலகிலுள்ள 181 நாடுகளுள் 101 நாடுகள் வியாபாரம் செய்வதற்கு இலங்கையைவிடச் சிறந்த முதலீட்டு வாய்ப்புகளை வழங்குகின்றன. வியாபாரம் செய்வதற்கு உலகிலேயே மிகந் சிறந்த நாடாக சிங்கப்பூர் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. முதல் 10 இடங்களிலுள்ள ஏனைய நாடுகளுள் நியூ சீலாந்து, அமெரிக்கா, ஹொங்கொங், டென்மார்க், ஐக்கிய இராச்சியம், அயர்லாந்து, கனடா, அவுஸ்திரேலியா, நோர்வே என்பன அடங்கும். ஆசிய பிராந்தியத்தில் ஜப்பான், தாய்லாந்து, மலேசியா, கொரியா, மாலைத்தீவு, பாகிஸ்தான், சீனா, வியட்நாம் என்பன இலங்கையைவிட முன்னால் உள்ளன.



பேராசிரியர் சிரிமல் அபேரத்ன அவர்களினால் கொள்கை விளக்கம் பாத்·.பைன்டர் பவுண்டேஷனால் ஒழுங்குசெய்யப்பட்ட பகிரங்க கருத்தரங்கொன்றில் (சங்வாத) சமர்ப்பிக்கப்பட்ட "இலங்கையில் ஒளிமயமானதொரு எதிர்காலத்திற்கான முன்னோக்கு மஹிந்த சிந்தனையை எய்துவதற்கான ஒரு அணுகுமுறை" என்ற தலைப்பிலான அவரது ஆய்வுக் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டது.

கலாநிதி சிரிமல் அபேரத்ன கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஒரு பொருளியல் பேராசிரியராவார். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவராக 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவையில் பேராசிரியர் அபேரத்ன பல வெளியீடுகளை வெளியிட்ட பராட்டுக்குரியவராவார். இவர் இந்திய - இலங்கை ஆய்வுகளுக்கான நடுநிலையத்திற்கு சிரேஷ்ட ஆராய்ச்சி ஆலோசகராகவும் பணியாற்றுகின்றார்.

English to Tamil translation done by Mr. Felix Philip, Chief Translator, Department of Legal Draftsman.

'POLICY BRIEF 20'

**பாத்பைண்டர் மன்றம்**

தொலைபேசி : 2 372 895 | மின் அஞ்சல் : info@pathfinderfoundation.org
இணையத்தளம் : www.sanvada.org, www.pathfinderfoundation.org

ஆசிரியபீட உதவியாளர் : திருமதி.அமீரா கரீம் / திட்ட முகாமையாளர்